பதிவு அஞ்சல் ஒப்புகை சான்றுடன்

**நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ)**
வேலூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு. **P. வேல் முருகன்**, பி.இ.,

ந.க.எண்.**5962/2018/வேம3,** நாள்:**05.11.2019**

* * * * *

| | |
|---|---|
| பொருள் : | அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைபடுத்துதல் திட்டம் – 2017 – 4.67 ஏக்கர் (18898.70 ச.மீ) பரப்பளவு மனை இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல்– தொடர்பாக. |
| பார்வை : | 1. அரசாணை எண் : 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள் : 04.05.2017.<br>2. அரசாணை எண் : 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள் : 13.10.2017.<br>3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் Operational Guideline, Roc. No.13193/2017/LA2, நாள். 30.10.2017, 31.10.2017, 03.11.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.<br>4. அரசாணை எண் :55, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள் : 02.05.2018.<br>5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கைகடிதம் Roc. No 13193/2017/LA2, நாள் : **02.05.2018** மற்றும் 07.01.2019<br>6. மனுதாரர் Mr. S.K .Venugopal அவர்களின் விண்ணப்பம் நாள்:**03.11.2018**<br>7. அரசாணை எண் : 21, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள் : 05.02.2019.<br>******** |

**உத்தரவு :**

பார்வை (1) மற்றும் (2)–ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை (3)–ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை (6)–ல் கண்ட மனுதாரர் கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், அரக்கோணம் நகராட்சி, வார்டு – எ, பிளாக் – 1, நகரளவு எண் : 9/ 7–ல் 4.67 ஏக்கர் (18898.70 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ./ந.ஊ.து.இ (வே.ம.) வரன்முறைபடுத்துதல் எண்: 721 (R)/2019** என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : | 18898.70 ச.மீ. (அ) 203425.20 ச.அடி (அ) 4.67 ஏக்கர் |
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | : | 95 = (1-59, 60E, 60W, 61-94) |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 20 |

விற்கப்பட்ட மனை எண்கள் : 2, 4-6, 8-16, 18, 26-29, 58, 60E

விற்கப்பட்ட மனைகளின் மொத்த பரப்பளவு : 33986.75 ச.அடி

விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை : 75

விற்கப்படாத மனைகளின் எண்கள் : 1, 3, 7, 17, 19-25, 30-57, 59, 60W, 61-94)

விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு : 139174.00 ச.அடி

ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை : 88

திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு : 14242.00 ச.அடி – 10.23%

(மனை எண்கள்: 55, 56, 74–78)

விற்கப்படாத மனைகளின் பரப்பு (பூங்கா பரப்பு நீங்கலாக) – 124932.00 ச.அடி

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்**

1. பரிசீலனைக் கட்டணம்

| | |
|---|---|
| இணையதள வாயிலாக மனை ஒன்றிக்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | ONLINE REGISTRATION NO : DTCP/L/0386421/2017, நாள்.14.08.2018 –ன் படி விற்கப்படாத 75 மனைகளுக்கான கூராய்வு கட்டணம் ஒரு மனைக்கு ரூ.500/– வீதம் ரூ.37,500/– ONLINE–ல் செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்தப்பட வேண்டும்.

1. வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்

| மனை எண் | பரப்பளவு (ச.மீ) | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 60/– (ரூபாய் அறுபது வீதம்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 150/– (ரூபாய் நூற்றுஐம்பது வீதம்) |
|---|---|---|---|

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

**அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு**

| | |
|---|---|
| " 0217 - Urban Development<br>60 - Other Urban Development Schemes<br>800 - Other receipts<br>AT - Receipts under Regularization charges of Unapproved Layout and Plots - DTCP<br>27 - Non Taxation Fees<br>30 - Regularisation<br>DPC : 0217 60 800 AT 2730) " | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

**ஆ) வளர்ச்சிக் கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.**

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சி வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனை

மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

03.11.2018–க்கு பின்னர் கூராய்வு கட்டணம் செலுத்தப்படும் மனைகளுக்கு பார்வை 7–ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ளவாறு கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டும்.

பார்வை 1, 2 மற்றும் 7–ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. அரசாணை (நிலை) எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நவ4(3) நாள்.13.10.2017–ல் விதி எண்.7 (g) (i) மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் (ம) திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. இம்மனைப்பிரிவு வரைபடம் புல வரைபடத்தின் அளவுகளின்படி தயாரிக்கப்பட்டுள்ளது அதன் அடிப்படையிலேயே விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத மனைகளின் அளவுகள் கொடுக்கப்பட்டுள்ளது.

3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ),
வேலூர் மண்டலம்.–1

இணைப்பு:
மனைப்பிரிவு வரைபடம் – 2.

பெறுநர்,
ஆணையர்,
அரக்கோணம் நகராட்சி ,
அரக்கோணம் வட்டம்,
வேலூர் மாவட்டம்.

நகல்:

| | |
|---|---|
| 1. மனுதாரர்.<br>Mr.S.K. Venugopal<br>No:15/2, Krishnaswamy street,<br>Esah Pallavaram,<br>Chennai-600023 | உள்ளாட்சிக்கு தேவையான ஆவணங்கள் மற்றும் விவரங்கள் சமர்ப்பிக்கும் பொருட்டு |

| | |
|---|---|
| 2. உதவி இயக்குநர்,<br>நில அளவை (ம) பதிவேடுகள் துறை,<br>வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>வேலூர் மாவட்டம். | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 3. வட்டாட்சியர்,<br>அரக்கோணம் வட்டம்,<br>வேலூர் மாவட்டம். | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 4. சார்பதிவாளர்,<br>அரக்கோணம் சார்பதிவாளர் அலுவலகம்,<br>வேலூர் மாவட்டம். | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 5. நகர் ஊரமைப்பு ஆணையர்,<br>807, அண்ணா சாலை,<br>சென்னை – 2. | (பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது) |
| 6. கோப்பு<br><br>7. வைப்பறை | |